**தலைப்பு 312 – மேல் மாகாண சபை - 2022**

---

**1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி**

**1.1 தூரநோக்கு**

''சகவாழ்வு மற்றும் நிரந்தர அபிவிருத்தியால் மேல் மாகாணம் முன்னணியில்''

**1.2 பணிக்கூற்று**

"நிதி, பௌதீக மற்றும் மனித வளத்தை மிக திறமையாக கொண்டு நடாத்தி சகல சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும் சமாதானம் மற்றும் சகவாழ்வு நிறைந்த நிரந்தர அபிவிருத்தியை ஏற்படுத்தல்''.

**1.3 செயற்பணி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுதல்.

**2. மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மேல் மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 56,789.00 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 55,228.73 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 1,560.27 மில்லியன் அல்லது தேறிய நிதியேற்பாட்டின் 2.75 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **செலவினம்** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | | **சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| மீண்டெழுபவை | 54,905.00 | 53,888.43 | 1,016.57 | 1.85 |
| மூலதனம் | 1,884.00 | 1,340.30 | 543.70 | 28.86 |
| **மொத்தம்** | 56,789.00 | 55,228.73 | 1,560.27 | 2.75 |

**3. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

மேற்படி தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.